# <u>விழுப்புரம் நகராட்சி</u>

**2020–ம் ஆண்டு ஜுன் மாதம் 10–ம் தேதி புதன்கிழமை காலை 10.15 மணிக்கு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில்** நடைபெற்ற **“அவசர கூட்ட”** நடவடிக்கைகள்.

<u>முன்னிலை :–</u> **ந.தட்சணாமூர்த்தி, பி.காம்.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**

## <u>மன்றப்பொருள்</u>

**1.** விழுப்புரம் நகராட்சி தோற்றுவிக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு இந்நகராட்சிக்கு ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டடம், சாலைகள் உள்ளிட்ட பல்வேறு திட்ட பணிகளுக்கு அரசாணை (நிலை) எண்.153, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.11.2019–ல் ரூ.4954.13 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

மேற்கண்ட அரசாணையில் வரிசை எண்.10–ல் காமதேனு நகர் பூங்கா மேம்பாடு செய்யும் பணிக்கு அனுமதிக்கப்பட்ட ரூ.102.00 இலட்சத்தினை, பூங்கா மேம்பாடு செய்யும் பணியினை கைவிடப்பட்டு அப்பணிக்கு மாற்றாக இந்நகராட்சிக்குட்பட்ட அனிச்சம்பாளையம் பகுதியில் புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய மீன்அங்காடி (மொத்தம் மற்றும் சில்லறை விற்பனை) அமைக்க முடிவு செய்யப்பட்டு ரூ.250.00 இலட்சத்தில் மதிப்பீடுகள் தயார் செய்து காமதேனு நகர் பூங்கா மேம்பாடு செய்யும் பணிக்கு ஒதுக்கீடு செய்த ரூ.102.00 இலட்சத்தினை அனிச்சம்பாளையம் பகுதியில் புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய மீன்அங்காடி (மொத்தம் மற்றும் சில்லறை விற்பனை) அமைக்க மாற்றம் செய்திடவும், மேலும் தமிழக முதல்வர் அவர்களால் விதி எண்.110–ன் கீழ் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதில் ரூ.4954.13 இலட்சத்திற்கு அரசாணையில் அனுமதி அளிக்கப்பட்டு மீதமுள்ள ரூ.45.87 இலட்சம் ஆக மொத்தம் ரூ.147.87 இலட்சத்திற்கு மீன்அங்காடி கட்டடம் கட்ட திருத்திய அரசாணை வழங்கக் கோரி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் பேரில் அரசாணை (நிலை) எண்.62, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.10.06.2020–ந் தேதியின்படி காமதேனு நகர் பூங்கா மேம்பாடு செய்யும் பணிக்கு மாற்றாக விழுப்புரம் அனிச்சம்பாளையம் பகுதியில் புதிய மீன்அங்காடி அமைக்க ரூ.102.00 இலட்சத்திற்கும், நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.148.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள (ஆக மொத்தம் ரூ.250.00 இலட்சம்) அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மீன்வளத்துறை இயக்குநர், சென்னை – 35 அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.2216/R1/2020, நாள்.15.05.2020–ல் விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட அனிச்சம்பாளையம் பகுதியில் புதிய மீன்அங்காடி அமைக்க நிர்ணயிக்கப்பட்ட மொத்த மதிப்பீடு ரூ.250.00 இலட்சத்தில், தேசிய மீன்வளர்ச்சி கழகம் மூலம் 50% தொகை ரூ.125.00 இலட்சம் மற்றும் 3% நிர்வாக செலவினம் ரூ.3.75 இலட்சம் ஆக மொத்தம் ரூ.128.75 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அவற்றில் 25% முதல் தவணையாக ரூ.32.1875 இலட்சம் விடுவித்து ஆணையிடப்பட்டுள்ளது.

விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட அனிச்சம்பாளையம் பகுதியில் புதிய மீன்அங்காடி அமைக்க விழுப்புரம் நகராட்சி நூற்றாண்டு விழா திட்ட சிறப்பு நிதியில் ரூ.102.00 இலட்சம், தேசிய மீன்வளர்ச்சி கழகம் மூலம் ரூ.125.00 இலட்சம் மற்றும் பொது நிதியில் ரூ.23.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.250.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம். (2075/2020/இ1)

**2.** விழுப்புரம் நகராட்சி பகுதியில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கு பயன்படுத்த இயலாத நிலையிலும், 2011–ல் நகராட்சியுடன் புதிததாக இணைக்கப்பட்ட ஊராட்சி (Added Area) பகுதிகளில் உள்ள சாலைகள் பழுதடைந்து போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லாததாலும் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகளை தமிழ்நாடு நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (TURIP 2020–21) மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கோரி மன்றத்தின் அனுமதிக்கு பிரேரணை வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | சிப்பம் முறை | நீளம் கி.மீ | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்கள்.03,04 மற்றும் 07–ல் அஜீஷ் நகர், அலமேலுபுரம் மெயின் ரோடு, இந்திரா வீதி, ராஜகோபால் நகர், செல்வா நகர், திருவள்ளுவர் தெரு, ரஹமத் கோல்டன் சிட்டி, அப்துல்கலாம் தெரு, செந்தில் நகர் மற்றும் மாரியம்மன் கோவில் தெருவிற்கு தார்சாலை அமைக்கும் பணி. | சிப்பம் முறை-I | 2.240 | 108.00 |
| 2 | வார்டு எண்கள்.01, 04, 07, 16, 17, 20, 25 மற்றும் 26–ல் பிள்ளையார் கோவில் தெரு, சாமுண்டீஸ்வரி தெரு, சிங்கார தோப்பு, வரதராஜன் லே அவுட், பூந்தோட்டம் மெயின் ரோடு, சின்னப்பா லே அவுட், ராஜீவ்காந்தி நகர், ராஜீவ்காந்தி நகர் குறுக்கு, சரஸ்வதி நகர், வழுதரெட்டி காளி கோவில், தென்றல் கார்டன் மற்றும் கணபதி நகரில் தார்சாலை அமைக்கும் பணி. | சிப்பம் முறை-II | 2.500 | 104.00 |
| 3 | வார்டு எண்கள். 27 மற்றும் 28–ல் நித்தியானந்தா நகர், தங்கம் நகர், ராகவேந்திரா நகர், சாலாமேடு ஹவுசிங் போர்டு, சர்வேயர் நகர், அபிதா கார்டன் 2–வது தெரு, ஸ்ரீராம் நகர் மற்றும் கஸ்தூரிபாய் தெருவிற்கு தார்சாலை அமைக்கும் பணி. | சிப்பம் முறை-III | 2.200 | 104.00 |
| 4 | வார்டு எண்கள். 28, 39, 40, 41 மற்றும் 04–ல் ஏடிஎல் நகர் குறுக்கு தெரு, நேரு தெரு (ம) காமராஜர் தெரு, ராமானுஜம் தெரு, சுபிக்ஷா கார்டன், பானாம்பட்டு குறுக்கு தெரு, வசந்தம் நகர் மற்றும் வசந்தம் நகர் 5–வது குறுக்கு தெருவிற்கு தார்சாலை அமைக்கும் பணி. | சிப்பம் முறை-IV | 1.880 | 86.00 |
| 5 | வார்டு எண்கள். 37, 41 மற்றும் 42–ல் அண்ணாமலையார் நகர் (ம) சன் சிட்டி, திருவள்ளுவர் நெடுந்தெரு மற்றும் ஜெகநாதன் நகர் மெயின் ரோட்டிற்கு தார்சாலை அமைக்கும் பணி. | சிப்பம் முறை-V | 2.350 | 98.00 |
| | | **மொத்தம்** | **11.170** | **500.00** |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் சாலை பணிகள் ஐந்து சிப்பங்களாக TURIP 2020–21 நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை சமர்ப்பிக்கலாம். (3547/2020/இ1)

**3.** அரசாணை (நிலை) எண்.142, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.**31.10.2019**–ல், விழுப்புரம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் அருகில் சர்வே எண்.219/2–ல் உள்ள 0.81 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இடத்தில் பல்நோக்கு வணிக வளாகம் ரூ.20.02 கோடி மதிப்பீட்டில் தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் (Under PPP Mode on DBFOT Basis) அமைக்க நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

08.02.2020 அன்று காலை 10.00 மணியளவில் திட்டப் பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் மேற்படி அரசாணையில் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ள வணிக வளாகம் அமைக்கப்படவுள்ள இடத்திற்கு அருகில் Chennai Silks Shopping Mall மற்றும் Greens Shopping Mall போன்ற வணிக நிறுவனங்கள் செயல்பட்டு வருவதால், மேற்படி திட்டம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததாக இருக்காது என கருதி, இத்திட்டத்திற்காக நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பார்வை 1–ல் காணும் அரசாணையினை ரத்து செய்து, அதற்கு பதிலாக மேற்காணும் இடத்தில் நகராட்சிக்கு வருவாய் ஈட்டக்கூடிய வகையில் நவீன காய்கறி அங்காடி மட்டும் அமைக்கலாம் என்றும், அதற்கான திட்ட மதிப்பீடு ரூ.3.00 கோடி நிதியினை முன் ஏலம் (Pre Action) நடத்தி அதன் மூலம் வைப்புத் தொகை பெற்று அந்த நிதியினை பயன்படுத்தி பணியினை நிறைவேற்றலாம் என்று தெரிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ள ஆலோசனையின்படி, விழுப்புரம் நகராட்சியில் ரூ.20.02 கோடி மதிப்பீட்டில் PPP Mode on DBFOT Basis-ல் வணிக வளாகம் கட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட மேற்காணும் அரசாணையினை ரத்து செய்யவும் , விழுப்புரம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் அருகில் சர்வே எண்.219/2–ல் உள்ள 0.81 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இடத்தில் நவீன காய்கறி அங்காடி கட்ட முன் ஏலம் நடத்தி வைப்புத் தொகை பெற்று அந்த நிதியைப் பயன்படுத்தி ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நவீன காய்கறி அங்காடி கட்ட நிர்வாக அனுமதி பெரும் பொருட்டு உரிய உரிய பிரேரணை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(5554/2018/இ1)

**4.** விழுப்புரம் நகராட்சி 02.03.1988–ன்படி தேர்வு நிலை நகராட்சியாகும். 2011–ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 1,41,162, மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 42 ஆகும். இந்நகராட்சி விழுப்புரம் மாவட்டத்தின் தலைமையிடமாக அமைந்துள்ளது. மொத்த பரப்பளவு 33.13 ச. கி. மீ. ஆகும்.

விழுப்புரம் நகராட்சியின் நிலத்தடி நீர்மட்டம் உயர்த்திடும் வகையில் இந்நகராட்சியில் உள்ள கீழ்க்காணும் குளங்களில் மழைநீர் சேகரிக்க ஏதுவாக, நீர்நிலை மேம்பாட்டு திட்டத்தின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு விவரம் பின்வருமாறு.

**பணியின் விவரம்**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.42–ல் உள்ள பானாம்பட்டு ஆயர்குளம் சர்வே எண்.662–ஐ சீரமைத்தல் மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளும் பணி. | 75.00 |
| 2. | வார்டு எண்.35–ல் உள்ள வண்ணான்குட்டை சர்வே எண்.79, Block No.8, வார்டு-B–ல் குட்டை தூர்வாருதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளும் பணி. | 50.00 |
| 3. | வார்டு எண்.21–ல் உள்ள கன்னியம்மன் கோவில் குளம் சர்வே எண்.A/87 TS.64-ஐ சீரமைத்து மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளும் பணி. | 57.50 |
| 4. | வார்டு எண்.01–ல் உள்ள கங்கையம்மன் கோவில் குளம் சர்வே எண்.665/P–ஐ சீரமைத்து மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளும் பணி. | 92.50 |
| | **மொத்தம்** | **275.00** |

மேற்காணும் குளங்களை மேம்பாட்டு பணிகள் செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நீர்நிலை மேம்பாட்டுத் திட்டம் **2020–2021**–ன் கீழ் பிரேரணை அனுப்பி வைக்கப்படுகிறது. இதற்கான தனி அலுவலரின் தீர்மான நகல் மற்றும் மதிப்பீடு இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. மேற்காணும் பணி மேற்கொள்ள ஏதுவாக மதிப்பீட்டு தொகையை அங்கீகரித்து, முழு மானியமாக நிர்வாக அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம். (4292/2020/இ2)

**5.** விழுப்புரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் கொண்டு வரப்பட்டு **26.06.2014** முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் **89.78** கி.மீ Collection Network மற்றும் **6** எண்ணிக்கையிலான கழிவு நீர் உந்து நிலையங்கள் (Lifting Station) **2** எண்ணிக்கையிலான கழிவு நீரேற்று நிலையங்கள் (Pumping Station) மற்றும் **2** கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STP Site) அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

தற்போது நகராட்சியில் பாதாளசாக்கடை திட்டப்பணிகளை மேற்கொள்ள இத்திட்டத்திற்கென தனியாக ஆட்கள் இல்லாததாலும், கழிவு நீருந்து நிலையம், கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள மோட்டார்களை தினசரி இயக்கி பராமரிப்பு பணியினை மேற்கொள்ள ஆட்கள் இல்லாததாலும், தனியார் Manpower மூலம் பராமரிப்பு செய்வதற்கு தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களது கடிதம் எண்.**23651/2013/DO1**, நாள்.**10.02.2017**–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கியதை தொடர்ந்து, **04/05/2017** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.VB அசோசியேட்ஸ், சென்னை–61 என்ற தனியார் நிறுவனத்தார் மதிப்பீட்டை விட குறைவான (மூன்று ஆண்டுகளுக்கும்) ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ளதால், அதனை ஏற்று **23.06.2017** அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பராமரிப்பு பணியினை மூன்று ஆண்டுகளுக்கு உடன்படிக்கை (Agreement) போடப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இந்நிறுவனத்தில் ஒப்பந்தக்காலம் 22.06.2020 உடன் நிறைவடைகிறது. தற்பொழுது COVID-19 வைரஸ் நோயினால் கடந்த மார்ச்–2020 முதல் ஊரடங்கு அமலில் உள்ள காரணத்தாலும், ஒப்பந்ததாரர் அவராகவே முன்வந்து பணியினை நீட்டிப்பு செய்து கொடுத்தால் பணியினை தொடர்ந்து செய்திட சம்மதித்து கடிதம் கொடுத்துள்ளதாலும், Technical Proposal–லில் பணி திருப்திகரமாக இருக்கும்பட்சத்தில், மேலும் மூன்றாண்டுக்கு நீட்டிப்பு செய்து பணி ஆணை வழங்கலாம் என்கிற நிலை உள்ளதாலும், மேற்படி பணியினை கீழ்கண்ட விலைவிகிதப்படி ஒவ்வொரு ஆண்டும் 5% உயர்த்தி நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கலாம்.

தற்பொழுது ஆண்டு பராமரிப்பு தொகை ரூ.77,17,500/– இலட்சமாகும்.

| வ. எண் | பராமரிப்பு ஆண்டு | பராமரிப்பு தொகை ஒரு வருடத்தில் (ரூ.இலட்சத்தில்) | 5% கூடுதல் தொகை (ரூ.இலட்சத்தில்) | மொத்த பராமரிப்பு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | முதலாம் ஆண்டு 23.06.2020 முதல் 22.06.2021 முடிய | 77,17,500/– | 3,85,875/– | 81,03,375/– |
| 2 | இரண்டாம் ஆண்டு 23.06.2021 முதல் 22.06.2022 முடிய | 81,03,375/– | 4,05,168/– | 85,08,543/– |
| 3 | மூன்றாம் ஆண்டு 23.06.2022 முதல் 22.06.2023 முடிய | 85,08,543/– | 4,25,427/– | 89,33,970/– |

மேற்கண்ட செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பாதாள சாக்கடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை மூன்று ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி விலைப்பட்டியலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 5% சதவீதம் உயர்த்தி பராமரிப்பு பணியினை நீட்டிப்பு செய்து, M/s.VB அசோசியேட்ஸ், சென்னை–61 என்ற தனியார் நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கிட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4918/2016/இ3)

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**
**விழுப்புரம் நகராட்சி.**